# தொழுத விபீடணற்குத் துணையாம் கோயில்

அன்பர்களே!
நம்முள் பலர் சாப்பிட்டகையால் காக்கையைக் கூட விரட்டாத கஞ்சமகா பிரபுக்களாய் உள்ளனர்.உடைந்து போன பழைய பாத்திரங்களைக் கூட பிச்சைக்காரனுக்குத் தராத மக்களும் உள்ளனர்.இதைவிடக் கேவலம்,காய்கறிப்பழக் கடைகளில் அழுகிய வாடிய கனிகாய்களைக் கூட ஏழைகளுக்கும் ஆடுமாடுகளுக்கும் தராது வீணாகக் குப்பையில் போடும் மக்கள் எத்தனை பேர்?

ஆனால் இதே நாட்டில்,பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தான் ஒரு மன்னன்.அவன் தன் மனைவியை ஒரு கெட்டவனிடன் பறிகொடுத்தான்.அவளை மீட்க உதவிய அந்த கொடிய அரக்கனின் தம்பிக்குத் தன் குலதெய்வத்தினையே தூக்கித் தந்தும் விட்டான்.ஆனால் என்ன காரணமோ அக்குலமூர்த்தி கடல் தாண்டிச் செல்லாமல் நம்மூரிலேயே காவிரி---கொள்ளிடக்கரையிலேயே தங்கிவிட்டது.

அந்த மாபெரும் வள்ளல் தான் ஸ்ரீராமன்.அந்த அரக்கனின் தம்பியே விபீஷணனன்.ராமன் தன் குலதெய்வமான ஸ்ரீரங்கநாதரையே தூக்கித் தந்துவிட்டான்.பல குடும்பங்கள் வேற்றுவர்களைத் தங்கள் குலக்கோயிலுக்குள்ளே விடாத சூழலில்,அன்று மாபெரும் இஷ்வாகு குல அரசனான ஸ்ரீராமன் தன் மூதாதையர் வழிபட்ட குலமூர்த்தியையே மற்ற குல மன்னனுக்கு அளித்துவிட்டான்.

**இ,ராமனை யாரும் தட்டிக் கேட்கவில்லையா?**

ராமனின் தம்பிகளும்,சீதையும்,தாய்மார்களும்,அனைவரும் ராமனின் செயல்கள் மீது மிக்கநம்பிக்கை வைத்து இருந்தனர்.அவன் என்ன செய்யினும் அதில் காரணம் இருக்கும் என்று நம்பினர்.அதுதானே சரணாகதி?அன்றைய கூட்டுக்குடும்பத்தில் அதுதானே ஆணிவேர்?

சரி.ஸ்ரீரங்கன் விபீஷணன் கைக்கு வருகிறார்.அந்த தெய்வத்துடன் அவனும் அயோத்தியாவில் இருந்து பிரியாவிடை பெற்று இஅலங்கைக்குத் திரும்பும் வழியில்,பல நாட்டு அரசர்களும் அவனைக் காண்கிறார்கள்,உபசரிக்கிறார்கள்.பலகாலம் ராவணனால் படாதபாடு பட்டபின் அமைதியை எண்ணி மகிழ்ந்து அவர்கள் இலங்கையின் புதிய அரவனை நட்புடன் இணைத்துக் கொள்கின்றனர்.எல்லாரும் இஷ்வாகுகுலதெய்வத்தினை தரிசிக்கிறார்கள்.இதனாலேயே வடநாட்டிலும் ரங்கன் ப்ரபலம் எனலாம்.

காவிரிக் கரையில் நிகழ்ந்த அரசியல் உடன்படிக்கை:
தென்னாடு வருகிறான் விபீஷணன்.உறையூரில் சோழப்பேரரசு தலைமை ஏற்று அரசாளும் காலம் அது.தர்மவர்மா என்ற மன்னன் ஆள்கிறான்.அவனுக்குப் பலகாலமாய் ரங்கனிடம் அதீத ஈடுபாடு.எப்படியாவது ரங்கனைத் தன் நாட்டுக்குள் கோயிலாக்க வேண்டும் என்று ஏங்கித்தவிக்கும் வேளையில் விபீஷணனும் வருகிறான்.அரசின் சிறப்பு விருந்தினன் ஆனான்.உறையூரில் அரண்மனையில் ரங்கன் வீற்றுஇருக்கிறார்.

முறைப்படி ரங்கனைப் பூசிக்க வடநாட்டு குருக்களும் அயோத்தியிலிருந்து இலங்கைக்குப் பயணப்படுகின்றனர் என்று கூற வாய்ப்பு அதிகம்.ஏன் என்றால் இலங்கையில்,வைஷ்ணவ தேவதையை ஆராதிக்கும் பழக்கம் இருக்க அன்று வாய்ப்பில்லை.அதனால் ரங்கனுடன் பல ஆச்சாரியர்களும் தென்றிருக்க வேண்டும்.

ஒவ்வொரு நாளும் ரங்கனின் சேவைகளைக் கண்டு தர்மவர்மாவும்,அரச குடும்பமும் சோழமக்களும் ஏங்கி ஏங்கி வணங்குகிறார்கள்.அதிலும் ஒரு ஓரத்தில் நின்று அதீத ஏக்கத்துடனும் ,காதல் பாவனையுடனும் ,ப்ரேமபக்தியால் உருகி உருகி ஒரு அழகிய பெண் ஆற்றாமையால் பெருமூச்சுவிட்டு சேவிக்கிறாள்.அவளால் தான் பின்னாளில் பெரும் ஆன்மீக தத்வமே உருவானது.[காண்க ஸ்ரீரங்க உல்லாசம் கட்டுரைகள்]

விபீஷணனுக்கோ விரைவில் இலங்கைக்குச் செல்ல மனம் துடிக்கிறது.ஏன் என்றால்,பங்குனி மாத உத்திரம் வருகிறது.இஷ்வாகு மன்னர்கள் முறையாக ரங்கனுக்கு காலம் காலமாக பங்குனியில் ப்ரம்மோற்சவம் நடத்தினர்.அதுவே இன்றும் ‘‘ஆதிப்ரம்மோற்சவம்’’ எனப்படுகிறது.அதுவே இன்றும் ப்ரதான ப்ரம்மோற்சவம் ஆகும்.

நட்ட நடு நிசி.......விபீஷணன் அறை.சோழன் தர்மவர்மா வ்ருகிறான்.விபீஷணனின் கால்களில் விழுகிறான்.பதறிவிடிகிறான் இலங்கை அரசன்.

*``ஹே!!!தர்மவர்ம!என்ன காரியம் இது?ஏன் என் கால்களில் வீழ்கிறீர்?``

*``விபீஷண!ராமனிடம் நீ கற்ற பண்பு என்னவோ?``

*``தர்மவர்ம!அவன் எனக்குக் கூறிய பாடமே சரணாகதி தான்.என்னை அவ்வளவு எளிதாக ராமனின் கூட்டத்தினர் முதலில் ஏற்கவில்லை.ஆனால் நான் ராமனிடம் என்னை அர்ப்பணித்த போது,அவன் என்ன கூறினான் தெரியுமா?``

*``அந்த பரமார்த்த விளக்கத்தினை தயவு செய்து கூறுங்கள்!``

*``விபீஷணனை ஏற்பதில் தடை என்றால்,என் தம்பியும்,சீதையும் எனக்குத் தேவையில்லை.நீங்கள் யார் எதிர்த்தாலும் எனக்குக் கவலையில்லை.என் உயிரைக் கொடுத்தாலும் அவனைக் காப்பேன்!!!``என்றான் ராமன்.அதுமட்டுமல்ல,உடனே லட்சுமணனை அழைத்தான்.தனுஷ்கோடிக் கடலில் இருந்து தண்ணீரை எடுத்து வரச்செய்து , நான் கேட்காமலேயே இலங்கை அரசை எனக்கு அளித்தும் விட்டான்.அங்கேயே இலங்கை அரசனாக எனக்குப் பட்டாபிஷேகமும் நிகழ்ந்தது.``

*``அப்படியே,நானும் உன்னிடம் சரண் புகுகிறேன்!``

*'ராம...ராம...சோழமன்னா!உனக்கு என்னிடம் என்ன வேண்டும் கேள்!``

*``மன்னா,நீ கொண்டுவந்துள்ள இஷ்வாகுகுல தெய்வதமான ஶ்ரீரங்கநாதன் வேண்டும்!!!அவர் இந்த சோழநாட்டில் கோயில் கொள்ள வேண்டும். மறுக்காமல் அருள்புரிவாய்!!!``

மேற்கொண்டு விபீஷணன் பேசவும் இல்லை.மனதால் பலவாறு க்லேசப்பட்டாலும் ,தன் ஆன்மீக உணர்வினால் ,பற்றறுத்து,ஆசையறுத்து ரங்கனைச் சோழநாட்டிலேயே ஸ்தாபித்தான்.

சோழமன்னனும்,மக்களும் கொண்டாடினர்.காவிரிக்கரையின் தீவுப்பகுதியில் கருவறை உண்டாக்கப் பட்டது.முறையாக ரங்கன் கோயில் கொண்டான்.விபீஷணன் தலைமையில் பங்குனி ப்ரம்மோற்சவம் கொண்டாடப் பட்டது.

இலங்கை மன்னனை மரியாதை செய்யும் வகையில்,மூலவரை இலங்கை நோக்கிப் பார்க்கும்படி அமைத்தான் சோழமன்னன்.ஆண்டுக்கு ஒருமுறை இலங்கை வேந்தனும் சோழநாட்டுக்கு வந்து ஆதிப்ரம்மோற்சவம் நடத்தியிருக்க வேண்டும்.

ராமாயணம் நமக்குக் கற்றுத் தரும் ஆன்மீகப் பாடம்,``பற்றறுத்தல்``.அதை முதலில் விபீஷணன் கற்றான் .அதை இத்தியாகம் மூலம் வெளிக்காட்டினான்.

எனவே ராமனின் முதன்மையான முதல் பக்தனுள் விபீஷணனும் ஒருவன்.

இப்படித்தான் ரங்கன் தமிழகம் வந்தார் என்று பக்திக்கனவினால் யோசிக்க வைக்கிறது.

சோழன் அரண்மனியில் ரங்கனைப் ப்ரேமத்தினால் ரசித்தாள் ஒருத்தி என்று பார்த்தோமே...அவள் தான் இன்று ரங்கனின் மனைவியருள் இரண்டாமவளான உறையூர்க் கமலவல்லி நாச்சியார்.உருவவழிபாட்டின் மேன்மையினை உலகிற்கு உணர்த்திய பத்தர்களுள் இவளும் ஒன்று.

இவளால் ஶ்ரீரங்கத்தில் சில ப்ரச்சனைகள் உண்டாயின.அதனாலேயே பங்குனி உத்திரத்தில் ப்ரணயகலகம் உண்டானது தாயாருக்கும் பெருமாளுக்கும் இடையில்.வரலாற்று எதார்த்த ரீதியாக இந்தக் கலகத்தினை நாமும் ரசிக்கலாமா?

செல்லுங்கள் அடுத்த கட்டுரைக்கு.நன்றி!!!